10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 175 புதன்கிழமை நவம்பர் 15 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## மயிலிட்டி மக்களுக்கு நோர்வே ஒரு மில்லியன் உதவி

யாழ்ப்பாணம், நவ.15

மயிலிட்டியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களுக்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக, நோர்வே அரசு நிதி உதவி வழங்கவுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவருக்குமிடையே இது தொடர்பான உடன்படிக்கை கொழும்பில் நேற்றுக் கைச்சாத்தானது.

மயிலிட்டித் துறைமுகத்தை அண்டிய பகுதிகளின் அண்மையில் மீள்குடியமர்ந்த 550 குடும்பங்களுக்கே, வாழ்வாதாரத் திட்டங்களை வழங்குவதற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை நோர்வே வழங்கியுள்ளது. (அ)



## பேரெழுச்சி

### அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகப் பேரணி: ஆயிரக்கணக்கில் திரண்டனர் பொதுமக்கள்

யாழப்பாணம், நவ.15

அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், அனுராதபுரத்தில் உண்ணா விரதம் இருந்த 3 அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் யாழ். பல்கலைக்கழகம், பொது அமைப்புகள் இணைந்து பேரணியை நடத்தின. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு கோரிக்கைகளை 06

## மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரம் இன்று

கொழும்பு, நவ.15

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள கால மீளாய்வு கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த மதிப்பீடுகள் 06

## வாக்குறுதியை நிறைவேற்றினார் ஜனாதிபதி

கொழும்பு, நவ.15

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பில், 8 மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட் 06

# நேற்றிரவு பயங்கரம் வாள்வெட்டு



**2 மணி நேரத்தில் 4 இடங்களில்**

**8 பேர் படுகாயம்**

**அச்சத்தில் குடாநாடு**

யாழ்ப்பாணம், நவம்பர் 15

யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு இரண்டு மணி நேரத்துக்குள் 4 இடங்களில் வாள்வெட்டுக் குழு அட்டாகசம் புரிந்துள்ளது. இந்தச் சம்பவங்களில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

**சங்குவேலியில்**

இரவு 7 மணியளவில், வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்த நால்வரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியது. அத்துடன் வீட்டில் இருந்த பொருட் 06

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எண்மர் மீது மோசடிக் குற்றச்சாட்டு

### யாழ்.செயலகம் ஒழுக்காற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.15

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 8 பேர் திணைக்கள மட்ட ஒழுக்காற்று நடவடிக்கையில் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பலருக்கு எதிராக சமுர்த்தி திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள், பண மோசடியில் ஈடுபட்ட 5 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியான குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயல 06

## தமிழர் பிரதேசங்களில் மட்டுமா உள்ளூராட்சி மன்றத் தேர்தல்?



### முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ.15

தமிழ் மக்களை நாடி பிடித்துப் பார்ப்பதற்காக வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் நினைத்திருக்கலாம். எனவே தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். 06



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# மொழிப் பாகுபாட்டைத் தூக்கியெறியுங்கள்!

## வடக்கு ஆளுநர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, நவ.15

"மொழிப் பாகுபாட்டினைத் துக்கியெறிந்துவிட்டு மனிதநேயத்தை முன்னிறுத்தினாலேயே இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்" இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே.

கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நேற்று நடைபெற்ற மரநடுகை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நேற்றுக் காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி வி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், குறித்த பாடசாலைக்குத் தென்னிலங்கையைச் சேர்ந்த சுபோதி மகாவித்தியாலத்தின் அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் வருகை தந்து மரங்களை நாட்டினர். அப்போதே வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் உலக அளவில் வளர்ச்சி அடைந்தமைக்கு அங்கு உள்ள மக்களே காரணம். அவர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையே அதற்குக் காரணமாக அமைந்தது. இனம்,மதம், மொழி, சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாட்டினை கீழே வைத்துவிட்டு மனிதநேயத்தை மேலே வையுங்கள். அதன் மூலமே இந்த நாட்டினை அபிவிருத்தி செய்யமுடியும்.

தமிழ்ப் பாடசாலை, சிங்களப் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை என்ற பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும். மூவின மாணவர்களையும் ஒன்றாக ஓர் இடத்தில் இருத்தி கல்வி புகட்டும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் அடுத்த சந்ததி எந்தவித பாகுபாடும் இன்றி நாம் இலங்கையர் என்று வாழும் நிலை எட்டப்படும்" எனவும் வடக்கு ஆளுநர் இதன்போது தெரிவித்தார். (அ-11)



கொக்கிளாய்க்கு வந்து மர நடுகை செய்த தென்னிலங்கை மாணவர்கள்

## செல்போனால் பறிபோனது சிறுமியின் உயிர்

கொழும்பு,நவ.15

கைத்தொலைபேசியால் ஏற்பட்ட மனஸ்தாபத்தால், 10 வயது சிறுமி ஒருவர் தூக்கில் தொங்கியுள்ளார்.

பலாங்கொடை - ரன்தொலவத்த பகுதியைச் சேர்ந்த பாதிமா சௌம்யா என்ற சிறுமியே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் தந்தை இவர்களை விட்டுச் சென்ற நிலையில், சம்பவம் நடைபெற்ற தினம் தாயார் வேலைக்கு சென்றுள்ளார்.வேலையை முடித்துக் கொண்டு சிறுமியின் தாய் வீடு திரும்பிய போது, மகளைக் காணவில்லை எனத் தேடியுள்ளார். இதன் போது வீட்டின் பின்பகுதியில் சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார் கைத்தொலைபேசிப் பிரச்சினை காரணமாக இவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

## 'கள்ளப் பாஸ்போர்ட்' கிளி.இளைஞர் கைது



கொழும்பு, நவ.15

டுபாயில் இருந்து இலங்கை வந்த கிளிநொச்சி இளைஞர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவின் போலி வெளிநாட்டுக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டதாலேயே, குறித்த நபர் கைதாகியுள்ளார்.

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கை ஊடாக ஆட்களை ஐரோப்பாவுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்ட இந்த நபரும் அதே முறையில் மலேசியாவுக்குச் சென்று போலி வெளிநாட்டுக் கடவுச்சீட்டைத் தயாரித்து, பிரான்ஸுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# கிழக்கு மாகாணத்தில் உடனடி இடமாற்றம்

கொழும்பு,நவ.15

கிழக்கு மாகாணத்தில் நகர சபைகள் உட்பட பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது தென, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமையில் இருந்து அமுலுக்கு வரும் வகையில், இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே இந்த இடமாற்றம் அமுல்படுத்தப்படவுள்ளது.

குறித்த இடமாற்றங்களின் மூலமாக வினைத்திறன் மிக்க நகர மற்றும் பிரதேச சபைகளாக இவை மாற்றம் பெறும்" என்றார். (அ)



## தொண்டா பெயர் நீக்கம் தொடரும் போராட்டம்

ஹட்டன்,நவ.15

ஹட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் மாற்றப்பட்டமை தொடர்பில் நோர்வூட் பொய்ஸ்டன் தோட்ட மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். பொய்ஸ்டன் தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக ஒன்று திரண்ட மக்கள் பதாகைகளை ஏந்திய வண்ணம் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

ஹட்டன் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு இடப்பட்டிருந்த தொண்டமானின் பெயரை அகற்றியமை மலையக மக்களிடத்தில் அண்மைக்காலமாக மனக்கசப்பினை ஏற்படுத்தியிருந்தது. இந்த விடயம் அரசியல் ரீதியில் மலையகத்தில் வேறுபாட்டை உருவாக்கியுள்ளது. எனவே உடனடியாக அரசாங்கத் தலைமைகள் தலையீடு செய்து, மீண்டும் தொண்டமானின் பெயரை உள்வாங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பெற்றோல் அறிக்கை நேற்றுக் கையளிப்பு

கொழும்பு, நவ.15

கடந்த வாரம் நாட்டில் நிலவிய பெற்றோல் தட்டுப்பாடு தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் தட்டுப்பாடு எப்படி ஏற்பட்டது என்பது தொடர்பில் ஆராய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த 7ஆம் திகதி மூன்று அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்தார். அமைச்சர்களான பாட்டாலி சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம மற்றும் அனுரபிரியதர்ஸன யாப்பா ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் மூவருமே தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் இன்று கையளித்துள்ளனர்.(அ)

## மீண்டும் லக்ஸபானாவில் மின் உற்பத்தி

கொழும்பு, நவ.15

லக்ஸபானா, புதிய லக்ஸபானா கெனியோன் மற்றும் பொல்பிட்டிய ஆகிய நீர்மின்சார உற்பத்தி நிலையங்களில் மீண்டும் மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவசரத் திருத்தப்பணிகள் காரணமாக அந்த மின்சார உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செயற்பாடுகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

லக்ஸபானா நீர்த்தேக்கத்தில்இருந்து பொல்பிட்டிய நீர் மின்சார உற்பத்தி நிலையம் வரையில் நீரைக்கொண்டுச் செல்லும் சுரங்க வழி பாதையின் திருத்தப் பணிகள் காரணமாக லக்ஸபான நீர்த்தேக்கத்தின் நீரை வெளியேற்றும் பணிகள் இடம்பெற்றிருந்தன. குறித்த பணி நிறைவடைந்ததையடுத்து, மீண்டும் மின் உற்பத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (அ)

## சரண குணவர்த்தனவை உடனே ஆஜர் செய்க!

### நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, நவ.15

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவை நீதிமன்றத்தில் ஆஜரப்படுத்துமாறு வெலிக்கடைச் சிறைச் சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆட்டிகல உத்தரவிட்டுள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் வாகனங்களை வாடகைக்குப் பெற்றபோது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பாக தொடரப்பட்டிருக்கும் வழக்குகள் தொடர்பிலான மேலதிக சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்குக்கான சாட்சிகள் நீதிமன்றத்துக்கு சமூகமளித்திருந்த வேளையில் முன்னாள் பிரதி அமைச்சர் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவில்லை. இதனாலேயே கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆடிகல இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
புதன், 15 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

## தண்டனைக்குப் பின் விசாரணை

பரீட்சைத் திணைக்களம் எப்போது க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளை வெளியிடும்? என எல்லோரும் ஆவென்று காத்திருக்கையில், யாருமே எதிர்பாராத பெறுபேறு ஒன்று அதிரடியாக வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பதவியில் இருந்து கல்வியமைச்சுக்குப் பந்தாடப்பட்டுள்ளார் டபிள்யூ.எம்.ஜே.புஸ்பகுமார.

உயர்தரப் பரீட்சையின் போது வினாத்தாள் ஒன்று வெளியே கசிந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வசதியாகவே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஓரிரு நாள்களுக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஒருவரின் பதவி பிடுங்கப்பட்டிருந்தது.அப்போதே “இது ஆரம்பம் தான். இன்னும் பல அதிரடி மாற்றங்கள் பரீட்சைகள் திணைக்களத்தில் நடக்கவிருக்கின்றன” என கல்வியமைச்சு அறிவித்திருந்தது. ஆனால் அதற்காக இப்படி தடாலடியாக, பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தையே தூக்குவார்கள் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லைதான்.

கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துக்கும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் இடையே சில காலமாக ஒரு பனிப்போர் நிலவி வந்தது. இந்த நிலையில் கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு வினா வழுக்கள் கொண்டதாக அமைந்துவிட்டது. உண்மையில் அந்தக் கேள்வியில் தவறில்லை. கல்வித் திணைக்களம் வெளியிட்ட நூல்களில் தவறான தகவல் இடம்பெற்றதாலேயே குறித்த கேள்விக்கு மாணவர்களால் சரியான விடையை எழுத முடியவில்லை. ஆனால் கல்வியமைச்சர் அதனை மறைப்பதற்காக, குறித்த கேள்விக்கு சகலருக்கும் மேலதிகமாக 1 புள்ளியை வழங்குவேன் எனக்கூறினார்.

தன்னைக் கலந்தாலோசிக்காது, தன்னிச்சையாக கல்வியமைச்சர் இப்படி அறிவித்தமை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்குக் கடுப்பைக் கிளப்பியது. இது குறித்த தன் அதிருப்தியை அமைச்சருக்கும் அறிவித்தார்.

“ அந்தக் கேள்வியில் எந்தத் தவறுமில்லை. ஆனால் அது தொடர்பான கல்வியமைச்சு வெளியிட்ட இலவசப் பாடநூலிலேயே தவறாக உள்ளது. அத்தோடு அந்தக் கேள்விக்காக சகல மாணவருக்கும் ஒரு புள்ளியை வாங்குவதென்பது சாத்தியமற்றது. ஏனெனில் அந்தக் கேள்விக்கு பிழையாக விடை எழுதியவருக்கு குறித்த ஒரு புள்ளி போய்ச் சேருமென்றால் அது சிக்கல் இல்லை. ஆனால் சரியாக விடை எழுதிய மாணவருக்கு ஏற்கனவே அதற்கான புள்ளி கிடைத்திருக்கும். சகலருக்கும் ஒரு புள்ளி மேலதிகமாக வழங்கப்பட்டால், சரியாக விடை எழுதிய மாணவருக்கு இரண்டு புள்ளிகள் சென்று விடும். இது பல சிக்கல்களை ஏற்படுத்தும்” என புஸ்பகுமார, சுட்டிக் காடியது கல்வியமைச்சருக்குப் பிடிக்கவில்லை.

அதன் பின்னர்தான் உயர்தரப் பரீட்சை வினாத்தாள் ஒன்று பரீட்சை நடைபெறுவதற்கு முன்னரே வெளியான தகவலால், பிரதிப் பணிப்பாளர் ஒருவர் பலிக்கடாவாக்கப்பட்டார். அதன் பின்னர் இப்போது பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் கடாசப்பட்டுள்ளார்.

பரீட்சைகள் நிறைவுற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளேயே பெறுபேறுகளை வெளியிடும் வகையில் பரீட்சைகள் திணைக்களத்தின் சேவைகளைத் துரிதமானதாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மாற்றியவர் புஷ்பகுமார. ஆனால் அதையெல்லாம், அரசு கணக்கில் எடுக்கவில்லை. இந்த இடமாற்றம், புஷ்பகுமார தவறு செய்தார் என்பதற்கானதல்ல. அவர் பதவியில் இருந்தால் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, சாட்சியங்களைக் குழப்பி, விசாரணைகளைத் திசை திருப்பி விடலாம் என்பதாலேயே இந்த இடமாற்றம். ஆனால் இலங்கையின் நிர்வாக சேவையில் அதியுச்சத்தில் இருந்த ஒருவரை விசாரணை முடியும் வரை, கல்வியமைச்சில் குந்த வைப்பதென்பது கிட்டத்தட்ட ஒரு உளவியல் தண்டனை தான்.

யார் தவறிழைத்தாலும் ஈவிரக்கம் பாராது அவர்களுக்கான தண்டனைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்களில்லை. ஆனால் குற்றவாளிகள் என்று பகிரங்கமாக அடையாளப்படுத்தபட்டவர்கள் கூட உல்லாசமாகச் சுற்றித் திரிகிறார்கள். ஆனால் குற்றவாளியா , இல்லையா என்று தீர்மானிக்கப்பட முன்னரே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஒரு தண்டனைக் காலம் போல இடமாற்றப் பட்டிருக்கிறார்.

முரண்பட்ட எந்தத் தரப்பில் நியாயம் இருக்கிறதோ நாமறியோம். ஆனால் எந்தத் தரப்பில் தவறு என்று கொஞ்சம் ஆறுதலாக ஆராய்ந்துவிட்டு , தீர்ப்பை வழங்கியிருக்கலாம். ஆனால் தீர்ப்பை வழங்கி, தண்டனையும் கொடுத்துவிட்டுத்தான் விசாரணைகளையே ஆரம்பிப்போம் என்பதுதான் நல்லாட்சித் தத்துவம் போலும்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று அமைதிப் பேரணி

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வலியுறுத்து

வவுனியா, நவ.15

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று மதியம் வவுனியாவில் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத்தரக் கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வடக்கு - கிழக்கு மாவட்டங்கள் தோறும் உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

வவுனியாவில் 264 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

வவுனியா கந்தசுவாமி கோயிலில் பூசை, வழிபாடுகளுடன் தொடங்கிய அமைதிப் பேரணி பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து, அங்கிருந்து ஏ-9 வீதியை அடைந்து உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்தை அடைந்தது.

பேரணியின் முடிவில் காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளையும், கணவன்களையும் மீட்பதற்காக ஐ.நாவில் குரல் கொடுக்கும் சர்வதேச நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின்றியும், கால வரையறையற்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ச)

## 2018 வரவு - செலவுத் திட்டம்

# நாடாளுமன்றுக்கு ஒரு ஆவணம்: நிறைவேற்றுவதற்கு வேறொன்றாம்

கொழும்பு, நவ.14

இம்முறை வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது, இரண்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன” என்று, மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

“இந்த இரு ஆவணங்களில் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதே வேளை, நிறைவேற்றுவதற்காக வேறொரு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது” என, முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

“நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில், அரச நிறுவனங்கள் விற்கப்படுவது குறித்தோ அல்லது குத்தகைக்கு விடப்படுவது குறித்தோ குறிப்பிடப்படவில்லை.



இருப்பினும் உண்மையிலேயே, அரச நிறுவனங்கள் பலவற்றைத் தனியாருக்கு விற்பனை செய்யவும் மேலும் சிலவற்றை தனியாரிடம் குத்தகைக்கு விடவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

“அதனால், இந்த வரவு - செலவுத் திட்டத்தினால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் இல்லை. அதனால், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தை எமது கட்சி எதிர்க்கும் என, பிமல் ரட்நாயக்க மேலும் கூறினார். (ச)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற ஹைஏஸ் வாகனத்தில் இருந்து 2 கிலோ கேரள கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியதுடன் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

நேற்றுப் பகல் கனகராயன்குளப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே ஹைஏஸ் வாகனம் வழிமறித்துப் பிடிக்கப்பட்டது.

வாகனத்தில் மறைத்து வைத்திருந்த கஞ்சாவை கைப்பற்றிய பொலிஸார் வாகனத்தின் சாரதியையும் கைது செய்தனர். அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், வவுனியா நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

# கடற்படையினரின் சந்தேகத்தால் 800 கிலோ மீன்கள் பறிமுதல்

மன்னார், நவ. 15




இரணைதீவு கடலில் பிடிக்கப்பட்ட சுமார் 800 கிலோ பாரை மீன்களுடன் கரை சேர்ந்த நான்கு மீனவர்களை கடற்படை யினர் கைது செய்துள்ளனர்.

டைனமற் வெடிபொருளைப் பயன்படுத்தி இந்த மீன்களைப்பிடித்திருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் மன்னார் பள்ளிமுனையை சேர்ந்தவர்களாவர்.

அவர்களிடம் இருந்து சுமார் 800 கிலோ பாரை மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட மீன்களின் பெறுமதி பல இலட்சம் ரூபா தேறும் எனத் தெரிய வருகின்றது.

கைதான மீனவர்களும், கைப்பற்றப்பட்ட மீன்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான மீனவர்களையும், கைப்பற்றப்பட்ட மீன்களையும் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தமுன் மீன்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையைப் பெறவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் உதவிப்பணிப்பாளர் பி.சகாயநாதன் மிராண்டா தெரிவித்தார். (ச)

# மட்டக்களப்பு அரச அதிபராக உதயகுமார்

கொழும்பு, நவ.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரச அதிபராக மா.உதயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் கடந்த மாதம் சுங்கத் திணைக்களப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சென்றிருந்தார்.

அவரின் இடத்திற்கு புதியவரை நியமிப்பதில் தாமதம் நீடித்தது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க அரசாங்கம் முயல்கிறது என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்நிலையிலேயே மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் உயர்பதவியில் இருந்த உதயகுமார் புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று நாளும் கோளும்

15.11.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள்


துவாதசி பி.ப. 03.11 மணி வரை | ஹஸ்தம் பி.ப. 04.04 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் 09.15 - 10.15 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நம்பிக்கை | பெருமை | சுகம் | உயர்வு | தெளிவு | சுபம் | இரக்கம் | அலைச்சல் | பயம் | அமைதி | குழப்பம் | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலால் அசிங்கமாகும் வவு. மணிக்கூட்டுக் கோபுரம்




வவுனியா, நவ.15

வட மாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகக் காணப்படும் வவுனியா நகரின் மத்தியில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்தின் நான்கு பக்கங்களும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அரசியல் பிரசாரப் பதாகைகளால் மூடப்பட்டுள்ளன. இது வவுனியா நகரின் அழகைச் சீர்குலைப்பதாகவும், அரசியல் பிரசாரங்களுக்கு மணிக்கூட்டுக் கோபுரத்தை வழங்கக் கூடாது எனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை செயலாளர் ஆர்.தயாபரன் அவர்களிடம் வினவியபோது,

“வவுனியா நகரசபையினரால் வருடா வருடம் குத்தகை அடிப்படையில் இந்த மணிக்கூட்டு கோபுரத்தினை சூழ விளம்பர பதாகைகள் வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அதனை குத்தகைக்கு எடுத்த நபரொருவரே அரசியல் பிரசாரப் பதாகைகளை அங்கு வைத்துள்ளார்.

எம்மால் கடந்த முறை குத்தகை வழங்கும் சமயத்தில் எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்பட்டவில்லை, இனி வரும் காலங்களில் இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு நிபந்தனைகள் விதிப்போம்” எனத் தெரிவித்தார். (அ)



## பாலை நினைந்தூட்டும் தாய்மாரே...! அதை விற்கும் கடைக்காரரே..! நீவிர் வாழ்க!

பெரியவன் பெரியவன்தான். முந்தினவை பணத்தை வைச்சுப் பெரியவன் எண்டு சொல்லேல்லை. மனசை வைச்சுத்தான் பெரியவனெண்டு சொன்னவங்கள். சின்ன சின்ன விசியங்களை எல்லாம் எப்பிடி அந்த மனுசன் கவனிக்கிது பாத்தியளே?

வேறை ஆரை? எங்கடை ஜனாதிபதியைத் தான் சொல்லுறன். வேறை ஒண்டுமில்லை.

மனுசன் கூட்டங்களுக்கை போகேக்கைத் திடீரென பாய்ஞ்சு பிள்ளையளைத் தூக்கிக் கொஞ்சுறார். மடியிலை வைச்சிருக்கிறார். கிழடு கட்டையளோடை கதைக்கிறார். வெளியிலை நடக்கப் போகேக்கை திடீரென ஒரு மரக்கொப்பிலை இருந்து போறவாற ஆக்களை ஆரெண்டும் பாராமை கதைக்கிறார். ஏழை, எளியது எண்டு எல்லாரோடையும் அன்பாப் பேசிறார். சிரிக்கிறார். அதெல்லே வேணும் ஒரு மனுசனுக்கு!

இரண்டு நாளைக்கு முன்னம் கொழும்பு கோல்பேஸ் கடற்கரையிலை தேசிய “டையபற்றிக்ஸ்” தினத்தை ஒட்டி நடந்த நடைப் பயணத்திலை பங்குபற்றினவராம். அப்ப அங்கை மரக் கொப்பு ஒண்டிலை அவர் இருக்கிற ஒரு படத்தை கொம்பியூட்டரிலை போட்டிருக்கினம்.

காலமை பேப்பர் வாசிக்க வரேக்கை முதலிதான் கையிலை “கான் போன்” ஒண்டைக் கொண்டு வந்தவன். ஆளுக்கு அதை கை விரலாலை மேலை கீழை தட்டிப் பாக்கத் தெரியேல்லை. பிறகு பேப்பர் கடைப் பெடிதான் தட்டிப் பாக்கக் காட்டிக் குடுத்தவன். ஏதெடா உனக்குப் புதுப் போன் எண்டு கேட்டன்? ஆரோ சுவிஸிலை இருந்து வந்தாப் போலை அவன்ரை மனுசியின்ரை தம்பிக்காரன் தான் குடுத்து அனுப்பினவனாம். காலமையும் அதை எங்களுக்குக் காட்டி விறிசுவிட மனுசிக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். பிறகு மாட்டுப்பட்டுப் போனார். வீட்டைப் போனாப்போலை அதை மனுசி பறிச்சு வைச்சிட்டாளாம்.

போனிலை, ஜனதிபதி ஒரு மைலோ பைக்கற்றையும் கையிலை வைச்சிருக்கிற மாதிரியும் ஒரு படம் போட்டிருக்கு. எண்டும் காட்டினவன். ஜனாதிபதியைப் பற்றி என்னடா போட்டிருக்கு எண்டு முதலியைக் கேட்டன்? மைலோவுக்கை சட்டத்துக்குப் புறம்பா சீனியைக் கூடப் போட்டிருக்கினமாம். மைலோ கொம்பனியிட்டை தாங்கள் சொன்னதாம் சீனியை 5 வீதம் மட்டும் போடச் சொல்லி. ஆனால் அவை இனிப்பைக் கூட்டினால் கனக்க விக்கலாம் எண்டு நினைச்சு ஒரு பைக்கற்றுக்கு 16.5 வீதம் சீனியைப் போட்டிருக்கினமாம். கனக்க உழைக்க வேணுமெண்ட கெலிதான் உது.

அதோடை சொன்னவராம் தான் ஏற்கனவே சனத்தின்ரை நன்மையைப் பாக்கப்போய் சிகரட்டு, சாராயம் வேறையும் சில பால்மாக் கொம்பனியளின்ரை ஆக்கள் தன்னிலை கோபமா இருக்கினமாம். அதோடை இனி “மைலோ” காரரும் கோவிப்பினம் எண்டும் சொன்னவராம். ஆனால் தான் உதுக்கெல்லாம் பயப்பிடப் போறதில்லை எண்டு மனுசன் வலு அக்கறையோடை சொல்லுதாம்..

முந்தின ஆள் எண்டால், பரவாயில்லை எத்தினை அளவு சீனி வேணுமெண்டாலும் போடுங்கோ ஆனால் என்ரை பாங் எக்கவுண்டுக்கும் ஏதேனும் பாத்துப் போடுங்கோ எண்டு சொல்லி இருப்பர். இல்லாட்டி என்ரை மனுசி பேரிலை ஒரு “வசந்த மாளிகை” கட்டித் தரவேனும். ஆனால் அதிலை என்ரை மனுசி குளிக்கிறது எனக்கு மட்டும் தெரிய வேணும் மற்றவையின்ரை கண்ணுக்குத் தெரியப்பிடாது எண்ட கொண்டிசனையும் போட்டுச் சொல்லியிருப்பர். என்ன?


அதோடை மனுசன் விடேல்லை, இனிவாற பைக்கற்றுகளிலை சீனியைக் குறைக்க வேணும். இல்லாட்டில் தான் மைலோ பைக்கற்றைக் கையிலை தூக்கிக் கொண்டு றோட்டுக்கு இறங்கி ஊர் ஊராப் போய் சனத்துக்கு இதாலை வாற கேட்டையும் சொல்லப் போறாராம்.

மற்றும்படி சரியான பிரச்சினையோடை திரியிற ஜனாதிபதிக்கே மைலோகாரற்றை சேட்டை விளங்கீட்டிது. ஆனால் நித்தமும் காலமை கடை வாசலிலை ஒரு கையிலை நேசரிக்குப் போற குழந்தையைப் பிடிச்சபடி, ஒரு மைலோவும், ஒரு ரிப்பி ரிப்பியும், ஒரு பபுள் கம்மும்... ஒரு படியும்... எண்டு பாட்டுப் பாடுற மரமண்டையளுக்கு உதாலை எத்தினை கேடு வரும் எண்டு விளங்கேல்லையே!? வழக்கமாப்போலை விநாசிக்குத்தான் கதைக்கிறதாலை வில்லங்கம்.

வாழ்க ஜனாதிபதி. வளர்க அவர் சேவை!

- வில்லங்கம் விநாசி

## ஈரானின் நிலஅதிர்வு இலங்கையில் உணர்வு



கொழும்பு, நவ.15

ஈரான் - ஈராக் எல்லையில் ஏற்பட்ட நில அதிர்வு இலங்கையிலும் உணரப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஈரானில் பெரும் நில அதிவு ஏற்பட்டு சுமார் 450 பேர் பலியாகியிருந்தனர். அத்துடன் இந்த வருடம் உலகில் ஏற்பட்ட நில அதிர்வுகளில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்திய நில அதிர்வாக இது பதிவாகியுள்ளது. ஈரானின் நலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்வு இலங்கை நில அதிர்வு ஹக்மன, மஹகனதராவ மற்றும் பல்லேகலயில் அமைந்துள்ள அளவீடுகளிலும் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஆயினும் இதனால் பாதிப்பு ஏற்படாது எனவும், ஆனால் இந்தியப் பெருங்கடலில் ஏற்படுகின்ற நில அதிர்வுகள் தொடர்பிலேயே இலங்கை அவதானம் செலுத்த வேண்டும் எனவும் புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# ஐ.தே.க. சிறப்புக் கூட்டம் நாளை சிறிகொத்தாவில்

கொழும்பு, நவ.15

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில், கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொது எதிரணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தலைமையில், நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

பாதீடு விவாதம் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# உடுப்பிட்டியில் நடமாடும் சேவை



வடமராட்சி, நவ.15

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு, கிராம சேவையாளர் பிரிவில் பொது மக்களுக்கான பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது. இதன்போது அடையாள அட்டை விண்ணப்பித்தல், பிறப்பு இறப்புக்கான விண்ணப்பித்தல் பதிவுகள் மேற்கொள்ளுதல் போன்றன மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் கரவெட்டி உதவி பிரதேச செயலர் ரஜீவ், வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி சி.ஐ. குமரசேன, இமையாணன் மேற்கு கிராம சேவையாளர் சுதர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-11)

# “மாணவனை நிர்வாணமாக்கவில்லை”

## பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, நவ.15

“நாம் எந்தவொரு மாணவனையும் வீதியில்வைத்து ஆடைகளைக்களைந்து, நிர்வாணமாக்கவில்லை. அப்படி ஏதும் சம்பவம் நிகழ்ந்திருந்தால் அதுபற்றி உரியவர்கள் முறைப்பாடு செய்தால், அது தொடர்பில் விசாரிப்போம்” எனச் சிலாபம் பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்தவாரம் பொலிஸார் தேடுதல் ஒன்றை நடத்தியபோது, வீதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் மாணவன் ஒருவனின் ஆடைகளைக் களைந்து சோதனையிட்டதாகக் கூறப்படுகின்றது.

க.பொ.த. சாதாரணதரத்தில் கற்கும் குறித்த மாணவன் இந்தச் சம்பவத்தால் மனமுடைந்துள்ளதாகவும், பாடசாலைக்கும் செல்லாமல் வீட்டுக்குள் முடங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே அப்படியான சம்பவம் எதுவும் நடக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீற்றர் வட்டிக்கு நீதி வழங்க முடியாது

**கடன் வழக்கில் புதிய தீர்ப்பு**

யாழ்ப்பாணம், நவ.15
காசோலைகளை ஆதாரமாக வைத்து பணத்தை மீள வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.
"குற்றவாளியாக இனங்காணப்பட்டவர் வழக்காளிக்கு வழங்கவேண்டிய 47 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை செலுத்தும்படி நீதிவான் கட்டளை வழங்கியுள்ளார். அந்தக் கட்டளை யானது சட்டரீதியான கட்டளை இல்லை. அந்தக் கட்டளையை இந்த மன்று தள்ளுபடி செய்கிறது.
மாறாக எதிரிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. இந்தத் தண்டனை நீதிவான் நீதிமன்றத் தீர்ப்புத் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது" என மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.
யாழ்ப்பாணம், சுதுமலையில் சினிமாப் படமாளிகைக்கு உபகரணங்கள் வழங்குவதாகப் பணத்தைப் பெற்று ஏமாற்றினார் என மக்கள் வங்கியின் முன்னாள் ஊழியர் ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர். எதிரிக்கு எதிராக அவரால் வரையப்பட்ட 5 காசோலைகள் நீதிவான் மன்றில் முன்வைக்கப்பட்டன. வழக்காளி மற்றும் மக்கள் வங்கி ஊழியர் ஒருவரும் நீதிமன்றில் எதிரிக்கு எதிராக சாட்சியமளித்தனர்.
இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கும் வழக்காளிக்கும் எந்தத் தொடர்பு மில்லை. வங்கி ஊழியரிடம் காசோலை வழங்கியே வட்டிக்குப் பணம் வாங்கியதாக எதிரி சாட்சியமளித்தார்.
விசாரணைகளின் நிறைவில் கடந்த ஜனவரி 4ஆம் திகதி எதிரியைக் குற்றவாளி என யாழ்ப்பாணம் நீதிவான் மன்று அறிவித்தது.
"குற்றவாளி 3 குற்றங்களுக்காகவும் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்த வேண்டும். வழக்காளிக்கு 47 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை இழப்பீடாகச் செலுத்தவேண்டும். அதனை வழங்கத்தவறின் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும்" என்று கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
இந்தத் தீர்ப்புக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஊடாக எதிரி மேன்முறையீடு செய்தார்.
அதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, நேற்றுத் தீர்ப்பளித்தார்.
" மீற்றர் வட்டி சட்டவிரோதமானது. இங்கு போடப்பட்ட வழக்கும் மீற்றர் வட்டிக் கொடுக்கல் வாங்கல் என்பது சாட்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சட்டவிரோதமான நடவடிக்கைக்கு நீதிமன்றில் நீதியைப் பெறமுடியாது. எதிரிக்கான தண்டனையை மாற்றியமைத்து புதிய தண்டனைக் கட்டளையை நீதிவான்சிறைச்சாலைக்கு வழங்கவேண்டும். இந்தக் கட்டளையை நீதிவான் நீதிமன்றுக்கு அனுப்பிவைக்க மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு கட்டளையிடப்படுகிறது" என்று தீர்ப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிட்டுள்ளார்.(அ)

## அந்த நாள் ஞாபகம்.....!




**1948.11.15**

*1948 - இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது*

# வர்த்தமானி அறிவிப்பு சபையில் சமர்ப்பணம்

கொழும்பு, நவ.15
அண்மையில் அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. பொருட்களின் விலையைக் குறிப்பிடும் வர்த்தமானி அறிவிப்பு,நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாழ்க்கைச் செலவுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலக்கரத்தன தெரிவிக்கையில்,சமீபத்தில் குறைக்கப்பட்ட பொருட்களின் விலைகள் நுகர்வோர் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
வாழ்க்கைச் செலவு தொடர்பான குழு நேற்று செவ்வாய்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடியது. இதற்கமைவாகப் புதிய விலைகளைக் குறிப்பிடும் வர்த்தமானி அறிவிப்பு நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எண்ணெய் வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு,நவ.15
தேங்காய் எண்ணெய் மற்றும் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையை அமுலுக்குக் கொண்டு வர நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.
தேங்காய் எண்ணெய் மூலமான விற்பனையில் கூடுதலான வருமானத்தை வர்த்தகர்கள் பெறுகின்றனர். இதன் பயன்கள் பாவனையாளர்களுக்குச் சென்றடைவதில்லை என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலக்கரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுக்கூட்டத்தில் கட்டுப்பாட்டு விலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு கடன் சீனாவே முதலிடம்

கொழும்பு, நவ.15
இலங்கைக்கு அதிக வெளிநாட்டுக் கடன்களை வழங்குவதில் இந்த ஆண்டிலும் சீனாவே முன்னிலையில் இருப்பதாக நிதியமைச்சின் அதிகாரபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.
2017ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான நிதியமைச்சின் நிதி முகாமைத்துவ அறிக்கை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.
இலங்கைக்கான வெளிநாட்டுக் கடனுதவிகளில் 35 வீதத்தை சீனாவே வழங்கியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, 901.6 மில்லியன் டொலரை இந்தக் காலப்பகுதியில் சீனா வழங்கியுள்ளது.
இதில் சீனாவின் எச்சிம் வங்கி ஊடாக, 257.1 மில்லியன் டொலரும், சீனாவின் அபிவிருத்தி வங்கி ஊடாக 62.2 மில்லியன் டொலரும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.
சீனாவை அடுத்து, ஆசிய அபிவிருத்தி வங்கி 22 வீதமான வெளிநாட்டு கடனுதவிகளையும், உலக வங்கி 16 வீதமான கடனுதவிகளையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இந்தக் காலப்பகுதியில் வீதிகள் மற்றும் பாலங்களை அமைப்பதற்கே அதிகளவில்- அதாவது, 43 வீதமான நிதி வழங்கப்பட்டுள்ளது.
அதையடுத்து, 10 வீதமான நிதி, சக்தி மற்றும் மின்சக்தி திட்டங்களுக்கும், 9 வீதமான நிதி நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு திட்டங்களுக்கும், 7 வீதமான நிதி சுகாதார மற்றும் சமூக நலன் திட்டங்களுக்கும், வழங்கப்பட்டுள்ளன. (அ)

# கடலில் மூழ்கிய மாணவனின் சடலம் திருக்கோவிலில் மீட்பு



கல்முனை, நவ.15
சாய்ந்தமருதுக் கடலில் கடந்த சனிக்கிழமை நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த போது கடல் அலையில் சிக்குண்டு காணாமல் போன மாணவனின் சடலம் திருக்கோவில் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமைகரையொதுங்கியது.
சாய்ந்தமருது-11 ஆம் பிரிவை சேர்ந்த முஹம்மட் லத்தீப் முஹம்மட் இன்ஸாத் (வயது-16) எனும் மாணவனின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.
கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் கல்வி பயில்கின்ற சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் கடந்த சனிக்கிழமை மதியம் சாய்ந்தமருது முகத்துவாரத்தை அண்மித்துள்ள கடலில் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது மூவர் கடல் அலையில் சிக்குண்டு மூழ்கியுள்ளனர். இவர்களுள் இருவர் மீனவர்களினால் காப்பாற்றப்பட்டு, ஆபத்தான நிலையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஒருவர் காணாமல் போயிருந்தார். அவரின் சடலமே சாய்ந்தமருதுக் கடலில் இருண்டு 33 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திருக்கோவிலில் மீட்கப்பட்டது. (அ)

# பெறாமகளை வன்புணர்ந்தவருக்கு 20 வருடக் கடூழியச் சிறை!

13 வயதான பெறாமகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சிறிய தந்தைக்கு 20 வருட கடூழியச் சிறையும், 4 இலட்சம் ரூபா நஷ்டஈடும் செலுத்துமாறு நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பு வழங்கியுள்ளார்.
வவுனியா மறவன்குளத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டு வைரமுத்து சிவலிங்கம் என்பவர் தனது மனைவியின் மூத்த கணவனின் மகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார்.
சிறுமி தனிமையில் இருந்த இரு சந்தர்ப்பங்களில் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார்.
இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.
பின்னர், 2016 ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.
அங்கு இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பை வழங்கிய நீதிபதி, இரு சந்தர்ப்பங்களில் செய்த குற்றங்களுக்காக, குற்றவாளிக்கு 20 வருட கடூழியச் சிறையும், 4 இலட்சம் ரூபா நஷ்ட ஈடும் வழங்குமாறும், தவறின் 4 வருட கடூழியச் சிறை தண்டனை அனுபவிக்குமாறும், தண்டப்பணமாக 20 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் செலுத்தத் தவறின் இரு மாதங்கள் சாதரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ச)

# சீனா போனது ஆஸி.வந்தது

கொழும்பு, நவ.15
இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டிருந்த சீனக் கடற்படைக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை விட்டு நேற்றுப் புறப்பட்டுச்சென்ற அதேவேளை, ஆஸ்திரேலியக் கடற்படையின் போர்க் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. கடந்த 10ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வந்த சீனக் கடற்படையின் பயிற்சிக் கப்பல் ஐந்து நாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு தாய்லாந்து நோக்கி நேற்றுப் புறப்பட்டுச் சென்றது.
அதேவேளை, ஆஸ்திரேலியக் கடற்படையின் போர்க் கப்பலான எச்எம்ஏஎஸ் நியூகாசில் நான்கு நாட்கள் பயணமாக கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. (அ)

# மரண அறிவித்தல்

## செல்லையா தெய்வநாயகம்



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெய்வநாயகம் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தாட்சாயினி, கயலினி, விதுரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்திரன், தனசீலன், சுகுனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சந்திரா தேவி மற்றும் சற்குணதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.11.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார்கோவிலடி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைகள் ஆணையாளர் கல்வி அமைச்சுக்கு மாற்றம்

கொழும்பு, நவ.15

பரீட்சைகள் ஆணையாளர் அதிபதி டப்ளியு. எம்.ஜே.புஸ்பகுமார, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை வினாத்தாள் ஒன்று வெளியான சம்பவம் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே பரீட்சைகள் ஆணையாளருக்கு இந்தப் பதவி மாற்றம் வழங்கப்பட்டது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் இரகசிய மற்றும் முகவர் பரீட்சைப் பிரிவின் பொறுப்பாகப் பணியாற்றிய பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர், அலட்சியம் மற்றும் தவறான நடத்தை தொடர்பான பல குற்றச்சாட்டுகள் தொடர்பாக இடைநிறுத்தம் செய்யப்பட்டு ஒருவாரத்துக்குள் பரீட்சைகள் ஆணையாளருக்கு இந்த மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான வினாத்தாள் அமைப்பு, விடைத்தாள் திருத்தம், புள்ளியிடல் மற்றும் பரீட்சைகளின் இரகசியத் தன்மை காப்பு என்பன குறித்த விசாரணைகள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என் பது குறிப்பிடத்தக்கது. (ச)




## புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



டிராக்டருடன் மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் றெட்பானா சந்தியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் அழகிரி பவீந்திரன் (வயது -22) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானார்.

வீதியை ஊடறுத்து டிராக்டரை திருப்பிய போது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் அதனுடன் மோதினார் எனக் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த இளைஞர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தொடர்ச்சிகள்

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இடம்பெறவுள்ளன.

ஜெனிவா நேரப்படி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு - இலங்கை நேரம் இரவு 7.30 மணிக்கு இலங்கை தொடர்பான மதிப்பீடுகளும் விவாதமும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பூகோள கால மீளாய்வில் இலங்கை தரப்புக்கு குழுவுக்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்க்ஷ டி சில்வா தலைமை தாங்கவுள்ளார். குழுவில், வெளிவிவகார அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். (ச)

## நேற்றிரவு பயங்கரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அடித்து நொருக்கி நாசமாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இதில் மானிப்பாய் குச்சி ஒடை சேர்ந்த ஆனந்தராசா ஜெனீஸ்கரன் (வயது -35), இராசதுரை ரவிசங்கர் (வயது 40), ரவிசங்கர் பகீரதன் (வயது 15), சங்குவேலி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் சிவகுருநாதன் (வயது 54) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

**ஆனைக்கோட்டையில்**

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தில் வீடொன்றுக்குள் நுழைந்த கும்பல் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியது. அத்துடன் வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தையும் அடித்து உடைத்துவிட்டுச் சென்றது.

இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை லோட்டஸ் வீதியைச் சேர்ந்த குலசிங்கம் குலபிரதீபன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

**முடமாவடியில்**

இரவு 8.10 மணியளவில் திருநெல்வேலி முடமாவடியில் வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல் ராஜன் லக்ஷ்மன் (வயது 20) என்பவரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு, அவரின் வீட்டில் நின்ற பல்சர் மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றது.

**கோண்டாவிலில்**

இரவு 8.45 மணியளவில் கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாகவுள்ள உணவகம் ஒன்றுக்குள் நுழைந்த கும்பல் அங்கிருந்தவர்களை விரட்டியதுடன் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியது. அத்துடன் கடையில் இருந்த பொருட்களையும் அடித்துடைத்து சேதப்படுத்தியது. இதில் செல்வராசா மணிமாறன் (வயது 27) என்பவர் படுகாயமடைந்தார்.

இந்த 4 சம்பவங்களும் ஒரு குழுவினாலேயே செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. சகல சம்பவங்களிலும் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் சென்ற 10 வரையிலான குழுவினர் இடம்பெற்றிருந்தனர். தாக்குதலாளிகள் அடையாளம் தெரியாமல் முகத்தை துணிகளால் மறைத்திருந்தனர் என்றும் ஒரே பாணியிலான தாக்குதல்களே அவ்விடங்களில் நடந்தன எனத் தெரிகிறது. அத்துடன் தாக்குதல் இடங்களுக்கும் நடந்த நேரங்களுக்கும் இடையே தேவையானளவு நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, முடமாவடியில் எடுத்துச்சென்ற மோட்டார் சைக்கிள் கோண்டாவில் தாக்குதல் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டமை சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகி உள்ளது. தடயங்களைக் கைப்பற்றிய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

மேலும், இந்தச் சம்பவங்களில் படுகாயமடைந்தவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

## தமிழர் பிரதேசங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

‘வாரத்துக்கொரு கேள்வி” எனத் தலைப்பிட்டு நாட்டின் அரசியல் நிலைவரம் தொடர்பில் வினா ஒன்றை எழுப்பி அதற்கு தாமே பதிலும் அளித்து வருகிறார் முதலமைச்சர்.

இதில், இந்த வாரத்துக்கான கேள்வியாக ‘உள்ளூராட்சித் தேர்தல்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டும் வைக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகவும் இது பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு முன்னர் தமிழ் மக்களின் மனோநிலையைக் கைபிடித்துப் பார்க்கும் ஒரு கைங்கரியம் என்றும் சிலரால் கூறப்படுகின்றதே. உங்கள் கருத்தென்ன?” என்ற வினாவை எழுப்பியிருந்தார்.

இது ஒரு ஊகம்தான். ஆனால் இக்கூற்றில் உண்மையிருக்கவும் கூடும். அரசாங்கம் சிங்களப் பிரதேசங்களில் தேர்தலை நடத்தப் பின்நிற்கின்றது. தமது பொருளாதாரக் கொள்கைகளும் தமிழர் சம்பந்தமான உத்தேச அரசியல் தீர்வுகளும் சிங்கள மக்களிடையே தமக்கெதிரான ஒரு அலையை உண்டு பண்ணிவிடுவோமோ என்று பயப்படுகின்றனர். எனவே முதலில் தமிழ் மக்களின் கருத்தை அறியப்பார்க்கும் ஒரு நிகழ்வாக இந்த உள்ளூராட்சி தேர்தல் நடைபெறலாம்.

அதாவது பௌத்தத்திற்கு முதலிடம், சமஷ்டி தேவையில்லை, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் என்ற கொள்கையுடைய தற்போதைய தமிழ்த் தலைமைத்துவத்தின் கருத்தை தமிழ் மக்கள் வரவேற்பார்களானால் சிங்கள மக்களுக்கு அதை எடுத்துக்காட்டி புதிய அரசியல் யாப்பை தாம் நினைக்கும் வண்ணம் நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்யலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடும். ஆகவே தற்போதைய தமிழ்த் தலைமைகளின் கருத்துக்களைத் தமிழ் மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஏற்றுக் கொண்டு பெருவாரியாக அக் கருத்துக்களை ஆதரித்தாரானால் மிகக் குறைவான தீர்வை நாம் விரைவாகப் பெற இடமிருக்கின்றது. ஆனால் வருங்காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன ஆகும் என்பதைத் தமிழ்த் தலைமைகளும் தமிழ் மக்களும் ஆய்ந்துணர வேண்டும்.

“போரில் தமிழர்கள் தோற்றுவிட்டார்கள் இனி மேல் முன் போல் எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியாது” என்ற ஒரு தோல்வி மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று ‘போரில் நாம் தமிழர்களை வென்று விட்டோம். ஆகவே அவர்களிடம் நாம் பறித்த காணிகள் யாவும் எமக்குச் சொந்தம். இனித் தமிழர்கள் கோரும் எந்தக் கோரிக்கைகளுக்கும் நாம் செவிசாய்க்கத் தேவையில்லை. நாமாக மனமுவந்து தருவதையே அவர்கள் ஏற்க வேண்டும்” என்று சிலர் கூறுகின்றனர். ஜே.வி.பி. கிளர்ச்சி போல விடுதலைப் புலிகள் செய்ததும் கிளர்ச்சியே தவிர போரல்ல. தமிழ் மக்கள் போரில் தோல்வி அடையவில்லை. அவர்கள் அன்றும் இன்றும் இந்த நாட்டின் அங்கமே. அவர்களின் சட்டரீதியான உரிமைகளைத் திருப்பிக் கேட்க எத்தருணத்திலும் அவர்களுக்கு உரிமையுள்ளது.

இன்றைய தமிழ்த் தலைமைத்துவம் தோற்றுவிட்டோம் என்ற மனப்பாங்கில் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்க நாம் தயார் ஒற்றையாட்சியின் கீழ் சிங்களப் பேரின வாதத்துக்கு தொடர்ந்து இடம் கொடுக்க நாம் தயார் வட கிழக்கை இணைக்காது விட நாம் தயார் தன்னாட்சி, தாயகம் போன்ற கோரிக்கைகளைக் கைவிடத் தயார் சமஷ்டி முறை சாத்தியம் இல்லை என்று கூறி ஒரு சில சலுகைகளை மட்டும் பெறும் வகையில் நடந்து கொள்வதால்த்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு ஏற்படப் பார்க்கின்றது. அதாவது நாமாகவே வலிந்து தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனங்களின் உள்ளடக்கத்தை தான்தோன்றித்தனமாகக் கைவிட எமது தலைமைகள் முன்வந்தமையே பிளவு ஏற்பட ஏதுவாக இருக்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் வலுவான ஒரு அரசியல் கட்சியாக முன்னேற முடியும். அவ்வாறில்லாமல் குறைந்ததைப் பெறுவதே உசிதம் என்று எமது தொடர் அடிப்படைக் கருத்துக்களை உதாசீனம் செய்தால் பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. ஆனால் அவ்வாறான குறைந்த பட்ச தீர்வுகளுக்கு இவ்வளவு தியாகங்களின் பின்னரும் எம்மவர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது சம்மதம் தெரிவிப்பார்களானால் அரசாங்கம் தான் நினைத்தவாறு சில சலுகைகளை எம் மீது திணித்துவிட்டு எமது நீண்டகால அரசியல் பிரச்சனையை மழுங்கடிக்க அது அனுசரணையாக அமையும். அத்துடன் வடமாகாணமும் கிழக்கு மாகாணம் போல் பறிபோய்விடும். (ச)

## பேரெழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரத்து ஒலித்தனர்.

யாழ். பல்கலைக்கழக முன்றலில் நேற்றுக் காலை 10 மணிக்கு பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு பேரணியாக யாழ். மாவட்ட செயலகம் நோக்கி சென்றனர்.

நாவலர் வீதியில் ஐ.நா. அலுவலகத்தை சென்றடைந்தது பேரணி. ஐ.நா. செயலாளருக்கான மகஜர் அங்கு கையளிக்கப்பட்டது. மகஜரைக் கையளிக்க மூன்று பிரதிநிதிகள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து பயணித்த பேரணி யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது. அரச அதிபரிடம் மகஜரைக் கையளித்தவர்கள், பின்னர் ஆளுநர் செயலகத்துக்கு சென்று ஆளுநரை சந்தித்து ஜனாதிபதிக்கான மகஜரைக் கையளித்தது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் ‘சர்வதேச விசாரணையில் இருந்து கொழும்பு அரசு தப்பிக்க அரசியல் கைதிகளின் சிறைவாசம் தொடர்வது என்ன நீதி?”, ‘சந்திரிகா அம்மையே எங்கே போனது உமது நல்லிணக்கம்”, 132 அரசியல் கைதிகளையும் விடுதலை செய்”, பல வருடங்களாக சிறையில் வாடும் எம் உறவுகளின் விடுதலை எப்போது?” எனக் கோக்ஷங்களை எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். (ச)

## வாக்குறுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோரின் உறவினர்களின் பிரதிநிதிகள் 31 பேர் இன்று கொழும்பு செல்லவுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிளிநொச்சி சென்றிருந்தபோது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

அவர்களை சந்தித்த ஜனாதிபதி போராட்டக்காரரை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருவதாக வாக்கு அளித்திருந்தார். அதற்கமையவே நாளைய சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் தமக்கு நல்லதொரு பதில் கிடைக்கும் என நம்புவதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## சமுர்த்தி உத்தியோக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்குட்பட்ட 3 உத்தியோகத்தர்களும் கரவெட்டி, சாவகச்சேரி பிரதேச செயலகங்களை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்குமே குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 3 சமுர்த்தி உத்தியோத்தர்களுக்கு எதிராக பண மோசடிக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கோப்பாய், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட தலா ஒரு சமுர்த்தி உத்தியோகத்தர் மீதே இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் திணைக்கள ரீதியான கணக்காய்வுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மண்டைதீவில் சிறுமி ஒருவர் மீது தவறாக நடக்க முற்பட்ட வேலணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் அச்சுறுத்தல் கடிதம்





வடகொரியா,நவ.15

அமெரிக்காவின் முக்கிய நகரங்களைக் குறிவைத்து எந்த நேரத்திலும் அணு ஆயுதத் தாக்குதலை முன்னெடுக்க வடகொரியா தயார் நிலையில் இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கிம் ஜோங் உன் குறிப்பிட்டுள்ளார்.

வடகொரியாவின் இந்த அச்சுறுத்தும் கடிதத்தைச் சிறப்பு அதிகாரி ஒருவர் ரஷ்யாவுக்கு நேரடியாகச் சென்று அளித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.இதனையடுத்தே ரஷ்ய ஜனாதிபதி விளடிமிர் புடின், அமெரிக்கா மற்றும் வடகொரிய நாடுகள் கட்டுப்பாட்டுடன் இருக்கவும், பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுக்கு எத்தனிக்கவும் கோரிக்கை விடுத்தார்.

வடகொரியாவின் குறித்த கடிதமானது, அமெரிக்கா மீதான வடகொரியத் தாக்குதலுக்கான 51 சதவிகித சாத்தியத்தை உறுதி செய்துள்ளதாக அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் சீனாவும் அதி நவீன ஆயுதங்களுடன் போருக்கான தயார் நிலையில் உள்ளதாகத் தகவல்கள் கசிகின்றன. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடந்த பல வாரங்களாக வடகொரியா குறித்து டுவிட்டரில் பதிவிடும் போதெல்லாம் மிகவும் ஏளனமாகப் பேசி வந்துள்ளார். இது வடகொரியாவைக்கடுமையாக எரிச்சலூட்டியுள்ளது. இதன் விளைவாகவே வடகொரியா அமெரிக்காவை தொடர்ந்து குறிவைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)



# 2 நாயகிகளுடன் ஆரவ்

சென்னை,நவ.15

'பிக்பாஸ்' என்ற பிரமாண்ட நிகழ்ச்சியின் வெற்றியாளர் ஆரவ். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவருக்கு நிறையப் படங்களில் வாய்ப்புக் கிடைத்து வருகிறது.

முதலில் ஆரவ் சிலம்பாட்டம் சரவணன் இயக்கும் படத்தில் ஹீரோவாக நடிக்க இருக்கிறார் என்று தகவல் வந்தது, ஆனால் படத்தில் யார், யார் நடிக்கிறார் என்ற தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இந்நிலையில், தற்போது அடுத்த படத்தில் ஆரவ் ஒப்பந்தமாகியுள்ளார்.இயக்குநரும், தயாரிப்பாளருமான சமீர் பரத் ராமின் படத்தில் ஆரவ் ஹீரோவாக நடிக்க உள்ளார். காக்கா முட்டை இயக்குனர் மணிகண்டனின் குறும்படமான மீண்டும் ஒரு புன்னகையை தான் சமீர் முழு நீளப் படமாக இயக்குகிறார்.அடுத்த ஆண்டு படப்பிடிப்புத் தொடங்கும் என்று கூறப்படுகிறது. இப்படத்தில் இரண்டு நாயகிகள் நடிக்கிறார் களாம். (இ)

# சவுதி மன்னர் இராஜினாமா?



சவுதி,நவ.15

சவுதி அரேபிய மன்னர் சல்மான் விரைவில் பதவியை இராஜினாமா செய்வார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனைச் சவுதி அரசு வட்டாரங்கள் மறுத்துள்ளன.

சவுதியில் மன்னர் சல்மான் தலைமையில் ஆட்சி நடைபெறுகிறது. அவரது மகன் முகமது பட்டத்து இளவரசராக உள்ளார். மன்னருக்கு எதிராகச் செயற்பட்ட அரச குடும்பத்து இளவரசர்கள் 11 பேர் அண்மையில் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். அரசுக்கு எதிராகக் கருத்துகளைக் கூறிவந்த இளவரசர் மிக்ரின் ஹெலிகொப்டர் விபத்தில் பலியானார்.

இந்நிலையில் வயது, முதுமை காரணமாக மன்னர் சல்மான் விரைவில் பதவி விலகுவார் என்றும் பட்டத்து இளவரசர்முகமது மன்னர்பொறுப்பை ஏற்பார் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனை மறுத்துள்ள அரசு வட்டாரம், மன்னர் மரணம் அடையும் வரை பதவியில் நீடிப்பார் என்று கூறியுள்ளது. (இ)

# பெற்றோலால் பூமி அழியும்



## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

நியூயோர்க்,நவ.15

அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களால் ஏற்படும் கரும் புகை காரணமாகப் பூமிக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.பருவநிலை மாற்றம் காரணமாக உலகில் பல்வேறு இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுகின்றன.

அதற்குச் சுற்றுப்புறச் சூழல் மாசடைதலே காரணமாகும்.

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் பயன்படுத்துவதால் வளிமண்டலத்தில் 'ஓசோன்' மண்டலத்தில் ஓட்டை ஏற்பட்டு அதனால் சூரியனின் வெப்பம் பூமியைத் தாக்குவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். காற்று மண்டலத்தில் ஏற்கனவே குறைவாக இருந்த மாசு அளவு தற்போது எப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது.

இதற்குப் பூமியில் அதிகரித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கமும், அவர்களால் பயன்படுத்தப்படும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களால் ஏற்படும் கரும் புகையும் காரணமாகக் கூறப்படுகிறது.இதே நிலை தொடர்ந்து நீடித்தால் பூமிக்கு எப்போதும் இல்லாத அளவுக்குப் பெரும் ஆபத்து ஏற்படும்.

இதை 184 நாடுகளைச் சேர்ந்த 15 ஆயிரம் விஞ்ஞானிகள் கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.மேலும் இதனால் வனப்பகுதிகள் அழியும்,சுத்தமான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும், கடல்வாழ் உயிரினங்கள் அழியும்,கடல்நீர் மட்டம் உயர்ந்து பேரழிவு ஏற்படும்,மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என நடக்கவிருக்கும் அழிவுகளையும் விளக்கியுள்ளனர். (இ)

# 'வாணி ராணி'க்கு முற்றுப்புள்ளி

சென்னை,நவ.15

வெள்ளித்திரை என்ன தான் வளர்ந்தாலும், மக்கள் மத்தியில் சின்னத்திரை மீதுள்ள ஈர்ப்பைத் தவிர்க்க முடியாது.

அதிலும் சீரியல்களால் தான் இன்று பல தொலைக்காட்சிகள் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் வாணி ராணி சீரியலுக்கு ஏகப்பட்ட ரசிகர்கள் உள்ளனர், 1000 பகுதிகளைத் தாண்டி வெற்றி நடை போடுகின்றது.இந்நிலையில் இந்த சீரியல் இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடியவிருப்பதாக இந்த சீரியலின் நாயகி ராதிகாவே சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியுள்ளார். இவை அந்த சீரியல் ரசிகர்களுக்கு வருத்தத்தை அளித்துள்ளது. (இ)

# மீண்டும் "த்ரிஷா இல்லனா நயன்தாரா"



சென்னை,நவ.15

த்ரிஷா இல்லனா நயன்தாரா' படத்துக்குப் பிறகு ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் இரண்டாவது முறையாக ஜி.வி.பிரகாஷ் குமார் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ், கயல் ஆனந்தி, மனீஷா யாதவ் நடிப்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்ற படம் ஹத்ரிஷா இல்லனா நயன்தாரா'.

அந்தப் படத்தைத் தொடர்ந்து ஆதிக், சிம்புவை வைத்து 'ஏஏஏ' படத்தை இயக்கினார். பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியான இந்த படம் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெறவில்லை. இந்நிலையில், ஆதிக் அடுத்ததாக ஜி.வி.பிரகாஷை மீண்டும் இயக்க இருக்கிறார். காதலை மையமாக வைத்து உருவாகவிருக்கும் இந்தப் படத்தைத் 3டி கமெராவில் படமாக்க படக்குழு முடிவு செய்துள்ளது.விஷன் ஐ மீடியா சார்பில் அரண்மனை படத்தைத் தயாரித்த தினேஷ் கார்த்திக் இந்த படத்தைத் தயாரிக்கிறார். மேலும் சோனியா அகர்வால் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஈரானில் நிலநடுக்கம் காரணம் என்ன?

ஈரான்,நவ.15

ஈரான், நிலநடுக்கத்துக்குப் பெயர்போன நாடு.கடந்த காலங்களில் மோசமான நிலநடுக்கம் அங்கு ஏற்பட்டு உள்ளது. இதற்கு என்ன காரணம் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அராபிய மற்றும் யுரேசியா டெக்டோனிக் தகடுகள் தொடர்ந்து மோதிக் கொள்கின்றன. நாட்டின் தென் கிழக்கில், அரேபியாத் தகடுகள் யுரேசியாத் தகடுகளைத் தள்ளுகின்றன. ஆனால், வட மேற்கில் இந்த இரண்டு தகடுகளும் ஒன்றோடு ஒன்று நேரடியாக உரசிக் கொள்கின்றன, இந்த அழுத்தத்தினால் தாம் ஜாக்ரோஸ் மலை உருவானது. இப்படியான உரசல்களாலேயே ஈரானில் அடிக்கடி நிலநடுக்கம் உண்டாவதாகக் கூறப்படுகின்றது.

முந்தைய அறிக்கைகள் இந்த நிலநடுக்கங்கள் மேல் ஓட்டின் உந்துதலினால் ஏற்படுகின்றன என்று கூறின.

இப்போது புவியியல் முகாமைகள் நிலநடுக்கத்தினால் ஏற்படப்போகும் உயிரிழப்புகளைப் பட்டியலிடுகின்றன.

நிலநடுக்கத்தின் அளவு, மக்கள் தொகை, எப்படி நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் கட்டடம் கட்டப்பட்டு இருக்கிறது போன்றவற்றை அடிப்படையாக வைத்தே இதை வரையறுக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

# சுழற்றியது போதும்




இஸ்லாமாபாத், நவ. 15

பாகிஸ்தான் அணியின் சர்ச்சைக்குரிய சுழல்பந்து வீச்சாளரான சயீத் அஜ்மல், சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளாராகத் திகழ்ந்தவர் சயீத் அஜ்மல். அந்த அணிக்காக 35 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 178 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். அத்துடன், 113 ஒருநாள் போட்டிகளில் 184 விக்கெட்டுகளையும், 64 இருபது-20 போட்டிகளில் 85 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

தன்னுடைய ஆட்டத்திறனை அதிகம் காட்டி விளையாடிய பொழுது அஜ்மல் உலக அரங்கில் முன்னணி சுழல் பந்து வீச்சாளராகத் திகழ்ந்தார். ஆனாலும் அஜ்மலின் பந்துவீச்சு, கிரிக்கெட் விதிகளுக்கு மாறாக "எறிவது" போன்று இருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் காரணமாக சர்ச்சையில் சிக்கினார்.

இதன் காரணமாக மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பின்னர் அவர் தனது பந்துவீச்சு முறையை மாற்றிக்கொண்டு மீண்டும் களமிறங்கினார். ஆனாலும் முன்பு போல் அவரால் பிரகாசிக்க இயலவில்லை. போட்டிகளில் விக்கெட்டுகளைக் கைப்பற்ற மிகவும் போராடினார். பின்னர் அவர் தேசிய அணியில் இடம் பிடிக்க முடியாமல் இருந்தனர்.

40 வயதான அஜ்மல், பாகிஸ்தானில் தற்போது நடைபெற்று வரும் தேசிய இருபது-20 போட்டித் தொடருடன் ஓய்வுபெற இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஓய்வு அறிவிப்புக் குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ள அவர்,

"எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் நிர்ணயித்திருந்த இலக்குகளை எட்டிவிட்டேன். இதனால், திருப்தியுடன் இந்தப் பயணத்தை முடித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# வில்லியர்ஸ் ருத்ரதாண்டவம்

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உள்ளூர் இருபது-20 போட்டியில் டிவில்லியர்ஸ் 19 பந்துகளில் அதிவேக அரைச் சதம் அடித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த லீக் போட்டியில், டைட்டன்ஸ் மற்றும் லயன்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி, 15 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஓட்டங்கள் சேர்த்தபோது மழை குறுக்கிட்டதால், ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் டைட்டன்ஸ் அணிக்கு 15 ஓவர்களில் 135 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்துக் களமிறங்கிய டைட்டன்ஸ் அணிக்கு, குயிண்டன் டி கொக் (39) ஓரளவு கைகொடுத்தார். பின்னர் வந்த டி வில்லியர்ஸ், தனது வழக்கமான ருத்ரதாண்டவ ஆட்டத்தைக் காட்டினார், அவர் 19 பந்துகளில் அரைச் சதம் விளாசினார்.

அல்பி மோர்கல் (41) இவருடன் சிறப்பாக இணைந்து ஆட, டைட்டன்ஸ் அணி 11.2 ஓவர்களில் இலக்கை எட்டியது. இதன் மூலம் டைட்டன்ஸ் அணி, 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேலும் இப்போட்டியில் டிவிலியர்ஸ் மொத்தமாக 5 சிக்சர்கள் விளாசினார். இருபது-20 போட்டிகளில் அதிவேகமாக அரைச்சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் டிவிலியர்ஸ் 7ஆவது இடம் பிடித்து அசத்தியுள்ளார். (ஐ)







# காத்திருக்கும் சந்தர்ப்பம்

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர் அஸ்வின் குறைந்த இன்னிங்ஸ்களில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையைப் படைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தத் தொடரில் அஸ்வின் 8 விக்கெட்டுகளை வீழ்த்தினால், குறைந்த இன்னிங்ஸ்களில், அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் பெறுவார். அஸ்வின் தற்போது 52 போட்டிகளில் விளையாடி 292 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவின் முன்னாள வீரர் டென்னிஸ் லில்லீ 56ஆவது போட்டியில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அடுத்த இடத்தில் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் 58 போட்டிகளில் 300 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

இந்தத் தொடரில் சாதிக்கும் பட்சத்தில், இரண்டு பேரையும் பின்னுக்குத் தள்ளி அஸ்வின் முதலிடம் பிடிப்பார். (ஐ)

# சுவிட்சர்லாந்து, குரோஷியா தகுதி

2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கு சுவிட்சர்லாந்து மற்றும் குரோஷியா அணிகள் தகுதிபெற்றுள்ளன.

சுவிட்சர்லாந்தில் உள்ள பாசெல் நகரில் நடந்த 'பிளே-ஆப்' சுற்று 2ஆவது ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து- வடக்கு அயர்லாந்து அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது.

2 ஆட்டங்கள் கொண்ட பிளே-ஆப் சுற்றில் முதல் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வடக்கு அயர்லாந்தை வீழ்த்தி இருந்தது. அந்த வெற்றியின் மூலம் சுவிட்சர்லாந்து அணி தொடர்ச்சியாக 4ஆவது முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது. அந்த அணி 11ஆவது முறையாகக் களம் காணுகிறது. தோல்வி கண்டதால் வடக்கு அயர்லாந்துக்கு முதல்முறையாக உலக போட்டிக்குள் நுழையும் வாய்ப்பு மயிரிழையில் நழுவியது.

இதேவேளை, கிரீஸின் பிராயூஸ் நகரில் நடந்த 'பிளே-ஓப்' சுற்று 2ஆவது ஆட்டத்தில் குரோஷியா-கிரீஸ் அணிகள் சந்தித்தன. பரபரப்பாக அரங்கேறிய இந்த ஆட்டமும் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது. இருப்பினும் முதல் ஆட்டத்தில் குரோஷியா அணி 4-1 என்ற கோல் கணக்கில் கிரீசை தோற்கடித்திருந்ததால் குரோஷியா அணி 5ஆவது முறையாக உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது.

அதன்படி, 2018ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணத் தொடருக்கு இதுவரை 28 அணிகள் தகுதி பெற்றுள்ளன. மேலும் 4 அணிகள் மாத்திரமே தகுதி பெற வேண்டியிருக்கிறது. (ஐ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி
Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 15.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.